**செய்தி வெளியீடு எண்:386** **நாள்: 22.06.2017**

**<u>செய்தி வெளியீடு</u>**

**2016–17 ஆம் ஆண்டில் வறட்சியால் பயிர் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு அரசின் முயற்சியால் இதுவரை ரூபாய் 928.12 கோடி இழப்பீட்டுத் தொகை பயிர் காப்பீட்டு நிறுவனங்களால் ஒப்பளிப்பு செய்யப்பட்டது**

2016–2017ஆம் ஆண்டில், மேட்டூர் அணையில் நீர் இருப்பு குறைவாக இருந்ததால், வழக்கமான ஜூன் 12–ஆம் தேதி மேட்டூர் அணையிலிருந்து பாசனத்திற்காக தண்ணீர் திறக்கப்படவில்லை. எனினும், டெல்டா மாவட்ட விவசாயிகளின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க நிலத்தடி நீரைப் பயன்படுத்தி, குறுவை நெல் சாகுபடியினை மேற்கொள்வதற்காக மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் உத்தரவுப்படி, **"குறுவை சிறப்புத் தொகுப்புத் திட்டம்"** செயல்படுத்தப்பட்டது. இதனால், சென்ற ஆண்டு குறுவை பருவத்தில் 3.16 இலட்சம் ஏக்கரில் நெல் சாகுபடி செய்யப்பட்டு, 5.02 இலட்சம் மெட்ரிக் டன் அரிசி உற்பத்தி செய்யப்பட்டது.

வடகிழக்கு பருவகாலத்தின் ஆரம்பத்தில் போதிய மழை இல்லாததால் சம்பா பருவத்தில் டெல்டா விவசாயிகளின் நலன் கருதி **சம்பா சிறப்புத் தொகுப்புத் திட்டம்** மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி செயல்படுத்தப்பட்டது. இதன் மூலம் சுமார் 11.92 இலட்சம் ஏக்கரில் சம்பா நெல் சாகுபடி மேற்கொள்ளப்பட்டது.

பயிர் இழப்பினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் வாழ்வாதாரம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற எண்ணத்தில், மாண்புமிகு புரட்சித்தலைவி அம்மா அவர்களின் உத்தரவுப்படி, புதிய பயிர்காப்பீட்டுத் திட்டத்தை தமிழகத்தில் தீவிரமாக செயல்படுத்த அரசு சீரிய முயற்சிகளை மேற்கொண்டது. **இதன் விளைவாக, தமிழ்நாடு முழுவதும், சென்னை மாவட்டம் நீங்கலாக 31 மாவட்டங்களில் பிரதம மந்திரியின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் 15.37 இலட்சம் விவசாயிகள் சாகுபடி**

**செய்த 31.85 இலட்சம் ஏக்கர் பயிர்கள் காப்பீடு செய்யப்பட்டு, அதிக அளவில் விவசாயிகளை பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் பதிவு செய்த மாநிலங்களுள் ஒன்றாகவும் தமிழகம் விளங்குகிறது.**

பிரதம மந்திரி பயிர் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ், தமிழகத்திலுள்ள மாவட்டங்கள் மூன்று தொகுப்புகளாக பிரிக்கப்பட்டு, இந்திய வேளாண் காப்பீட்டுக் கழகம் (Agriculture Insurance Company of India Limited), நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் பொது காப்பீட்டுக் கழகம் (New India Assurance General Insurance Company) மற்றும் ஐ.சி.ஐ.சி.ஐ லம்பார்டு பொதுக் காப்பீட்டுக் கழகம் (ICICI Lombard General Insurance Company) ஆகிய மூன்று காப்பீட்டு நிறுவனங்கள் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**காப்பீட்டுக் கட்டண மானியத்தில், மாநில அரசின் பங்கு கடந்த ஆண்டுகளை ஒப்பிடுகையில் பல மடங்காக உயர்ந்த போதிலும், தமிழக விவசாயிகளின் நலன் கருதி, 2016 – 2017ஆம் ஆண்டில், காப்பீட்டு கட்டணத்தில் தமிழக அரசின் பங்காக ரூ. 428 கோடியை மானியமாக காப்பீட்டு நிறுவனங்களுக்கு உரிய காலத்தில் வழங்கப்பட்டுள்ளது.**

சென்ற வருடத்தில் வடகிழக்கு பருவமழையும் மிகமிகக் குறைவாக பெறப்பட்டு தமிழகத்தில் வரலாறு காணாத வறட்சி ஏற்பட்ட காரணத்தால், பயிர்கள் பாதிப்படைந்தன. தமிழக அரசு, அனைத்து மாவட்டங்களையும் வறட்சி மாவட்டங்களாக அறிவித்து, மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து இடுபொருள் மானியமாக, இதுவரை இல்லாத அளவு ரூ.2247 கோடியினை அனுமதித்து பாதிப்படைந்த விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.

**காப்பீடு செய்து பயிர் பாதிப்படைந்த விவசாயிகளுக்கு இழப்பீட்டுத் தொகையை விரைந்து வழங்குவதற்காக, கிராம அளவில் பயிர் அறுவடை பரிசோதனைகள், வேளாண்மைத் துறை மற்றும் புள்ளியியல் துறைகளால் விரைந்து நடத்தப்பட்டு, காப்பீட்டு நிறுவனங்களுக்கு மகசூல் விவரங்களை நிர்ணயிக்கப்பட்ட**

**காலக்கெடுவுக்குள் வழங்க மாண்புமிகு முதலமைச்சர் திரு எடப்பாடி K. பழனிசாமி அவர்களின் உத்தரவின்படி தமிழ்நாடு அரசு துரித நடவடிக்கைகளை மேற்கொண்டது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இது சம்பந்தமாக பாரதப்பிரதமர் அவர்களிடமும் தொடர்ந்து வலியுறுத்தி வந்துள்ளார்கள்.**

**2016–17**ஆம் ஆண்டு பாரதப் பிரதமரின் பயிர் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் அனைத்து பணிகளும் காலத்தே நிறைவேற்ற தமிழ்நாடு அரசு மேற்கொண்ட சீரிய முயற்சிகளால் காப்பீட்டு நிறுவனங்கள் விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய இழப்பீட்டுத் தொகை விரைந்து கணிக்கப்பட்டு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. தமிழ்நாடு அரசு முனைப்புடன் செயலாற்றிய காரணத்தினால் குறுகிய காலத்திலேயே **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்களால் 24.4.2017 அன்று இழப்பீட்டுத் தொகை வழங்கும் பணி துவக்கி வைக்கப்பட்டது. 20.6.2017 வரை ரூ.40 கோடி இழப்பீட்டுத் தொகையாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.** இத்தொகை விவசாயிகளின் வங்கிக் கணக்கிற்கு நேரடியாக செலுத்தப்பட்டுள்ளது. இதில் ஐ.சி.ஐ.சி.ஐ லம்பார்டு பொதுக் காப்பீட்டுக் கழகம் ரூ.**6.40 கோடி** தொகையை சேலம் மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் சம்பா நெல் சாகுபடி செய்து பாதிப்படைந்த விவசாயிகளுக்கு வழங்கியுள்ளது. நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் பொது காப்பீட்டுக் கழகம் மூலமாக ரூ.**18.6** கோடி நாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள சில பகுதிகளுக்கும், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மாவட்டங்களில் சம்பா நெல் சாகுபடி செய்து பாதிப்படைந்த விவசாயிகளுக்கும் வழங்கியுள்ளது. மீதமுள்ள ரூ.**15** கோடி இந்திய வேளாண் காப்பீட்டுக் கழகத்தால் ஈரோடு, நாமக்கல், திருச்சி, கரூர் ஆகிய மாவட்டங்களில் சில பகுதியிலுள்ள விவசாயிகளுக்கு மட்டும் இதுவரை வழங்கியுள்ளது.

**தமிழக அரசு மேற்கொண்டு வருகிற தொடர் நடவடிக்கைகளின் காரணமாக, சம்பா நெல் சாகுபடி செய்து பாதிப்படைந்த விவசாயிகளுக்கு 21.6.2017 அன்று இந்திய வேளாண் காப்பீட்டுக்கழகம் இரண்டாம் கட்டமாக மேலும் ரூ.888 கோடியை வழங்க ஒப்பளிப்பு அளித்துள்ளது.**

இத்தொகை 10 மாவட்டங்களிலுள்ள சம்பா நெல் சாகுபடி செய்து பாதிப்படைந்த விவசாயிகளுக்கு வழங்கப்பட உள்ளது. குறிப்பாக திருவாரூர் மாவட்ட விவசாயிகளுக்கு ரூ.489 கோடியும், இராமநாதபுரம் மாவட்ட விவசாயிகளுக்கு ரூ.355 கோடியும், திருச்சி மாவட்ட விவசாயிகளுக்கு ரூ.20 கோடியும், அரியலூார், திண்டுக்கல், ஈரோடு, கன்னியாகுமரி, கரூர், மதுரை, நாமக்கல் மற்றும் பெரம்பலூார் மாவட்டங்களில் சம்பா நெல் சாகுபடி செய்து பாதிப்படைந்த விவசாயிகளுக்கு ரூ.24 கோடியும் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் நேரடியாக அடுத்த 10 நாட்களுக்குள் வரவு வைக்கப்படும் என இந்திய வேளாண் காப்பீட்டுக் கழகம் தெரிவித்துள்ளது.

தமிழ்நாடு அரசின் முயற்சியினால், சென்ற ஆண்டு சம்பா பருவத்தில் 16 மாவட்டங்களில் நெல் சாகுபடி செய்து பாதிப்படைந்த 2,92,096 விவசாயிகளுக்கு மொத்தம் ரூ.928.12 கோடி காப்பீட்டு நிறுவனங்களிடமிருந்து இதுவரை பெறப்பட்டுள்ளது. நெற்பயிருக்கான மீதமுள்ள இழப்பீட்டுத் தொகையையும், இதர பயிர்களுக்கான இழப்பீட்டுத் தொகையையும் விரைவில் விவசாயிகளுக்கு வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்களின் உத்தரவின்படி தமிழ்நாடு அரசின் வேளாண்மைத்துறை காப்பீட்டு நிறுவனங்களை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

*****

வெளியீடு : இயக்குநர், செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.
நாள் : 22.6.2017